சிறப்பு மாவட்ட நீதிமன்றம், ஈரோடு
(மோட்டார் வாகன விபத்து வழக்குகள்)
வழக்கு எண். MCOP. No.426/ 2021

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் தேதி எ.ம.சா.1 வாக்குமூலம் உறுதிமொழிச்சட்டம் 44/1969 பிரிவு 4 ஏற்பாட்டின் படி திரு.K.உமாசங்கர், கிரேடு–1 பெஞ்ச் கிளார்க், சிறப்பு மாவட்ட நீதிமன்றம், ஈரோடு என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சம்பத் | கிராமம் | : |
| த/பெ | : | மாவட்டம் | : |
| வயது | : | தொழில் | : |

<u>முதல் விசாரணை</u> :

நான் பாலக்கோடு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றுகிறேன் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். எங்கள் காவல் நிலைய குற்ற எண். 1510/2020 என்று வழக்கு பாலய்யன்என்பவர் மீது இதச பிரிவுகள் 279, 38 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவர் விபத்தின் போது KA 32 B 1640 என்ற டிப்பர் வண்டியை ஓட்டிச் சென்றுள்ளார். புலன் விசாரணைக்கு பிறகு மேற்படி வழக்கின் இறுதி அறிக்கை புகார்தாரரான சபரீசன் என்பவருக்கு எதிராக பதிவு செய்யப்பட்டது.மேற்படி குற்ற இறுதி அறிக்கை சா.சா.ஆ.1.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

விபத்து தொடர்பாக AP 39 V 8055 வாகனத்தின் ஓட்டுனர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

இறுதி அறிக்கையின் 17வது காலத்தில் FAD செய்யப்பட்டபோது அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்ற பகுதியில் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு வழங்கப்பட்ட RCS என்னை நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

<u>5ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

டிப்பர் லாரியின் ஓனர் திரு.சரவணன் என்பவர்தான் எழுத்து மூலமாக புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கில் நான் புலன் விசாரணை அதிகாரி அல்ல என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கை புலன் விசாரணை செய்த அதிகாரி சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.செந்தில்குமார் ஆவார். அவர் இன்னும் பணியில் இருக்கிறார் என்றால் சரிதான்.

மேற்படி இறுதி அறிக்கையை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கோப்புக்கு எடுக்கப்பட்டதா அதற்கு ஏதேனும் RCS எண் வழங்கப்பட்டதா என்பது குறித்து என்னுடைய கோப்புகளில் குறிப்பு இல்லை என்றால் சரிதான். மேற்படி விபத்தை பொறுத்து புகார்தாரர் சரவணனைத் தவிர வேறு யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை</u>:

இல்லை.